தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 5 திகதி: 20.11.2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. பிரியதர்சினி பாஸ்கரதேவன்
செல்வி. கவிஜா விக்னேஸ்வரன்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட கதையை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**குருவின் அறிவுறை**

பூங்குன்றம் என்ற அழகிய கிராமத்தில் சங்கீத வித்துவான் ஒருவர் வசித்து வந்தார். அவரிடம் அயலூரிலுள்ள சங்கர் என்ற சிறுவன், சங்கீதம் கற்று வந்தான். வித்துவான் சங்கருக்கு எல்லா இராகங்களையும் கற்பித்தார்.

சங்கர் படிப்பு முடித்து குருவிடம் ஆசி பெற்று தன் ஊருக்குப் புறப்பட்டான். அப்போது குரு அவனைப் பார்த்து உனக்கு இசையில் முழுத் திறமையும் வந்துவிட்டது. ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் ஆகிரி இராகத்தை மட்டும் பாடாதே. அப்படிப் பாடினால், அன்று முழுவதும் உனக்கு உணவு கிடைக்காது என்று கூறி வழி அனுப்பி வைத்தார்.

சங்கர் உணவுப் பொதியுடன் தன் ஊர் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தான். அவனுக்கு களைப்பாக இருந்தது. காலை நேரம் உணவுப் பொதியை மூங்கில் மரக்கிளையில் கட்டிவிட்டு இளைப்பாறினான். உணவுப் பொதி எதிரில் தானே உள்ளது ஆகிரி இராகத்தைப் பாடினால் என்ன உணவு கிடைக்காமலா போகும்? என நினைத்தான். தன்னை மறந்து நீண்ட நேரம் ஆகிரி இராகத்தைப் பாடி மகிழ்ந்தான்.

நண்பகல் நேரம் ஆனது. பசி அவனை வாட்டியது. மூங்கில் மரத்தைப் பார்த்தான். உணவுப் பொதியைக் காணாது அதிர்ச்சியடைந்தான். மரத்தை அண்ணார்ந்து மேலே பார்த்தான். அவன் கைகளுக்கு எட்டாத உயரத்தில் அதே மூங்கில் கிளையில் உணவுப் பொதி தொங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு அப்போது தான் உண்மை புரிந்தது. காலை நேரத்தில் தரையைத் தொட்டுக்கொண்டிருந்த மூங்கில் கிளை வெயில் ஏற எட்டாத உயரத்திற்கு நிமிர்ந்துவிட்டது என்பதை உணர்ந்தான்.

குருவின் அறிவுறையை மீறியதால் தனக்கு சரியான தண்டனைக் கிடைத்தது என்று எண்ணி மனம் வருந்தினான். பசியுடன் பயணத்தைத் தொடர்ந்தான்.

**“பெரியோரின் அறிவுறைகளைக் கேட்போம். அதன்படி நடப்போம்”**

1) சங்கீத வித்துவான் வசித்து வந்த கிராமத்தின் பெயர் யாது?

(2 புள்ளிகள்)

2) சங்கீதம் கற்க சென்ற சிறுவனின் பெயர் யாது?

(2 புள்ளிகள்)

3) குரு சிறுவனிடம் எந்த இராகத்தை பாட வேண்டாம் எனக் கூறினார்?

(2 புள்ளிகள்)

4) குரு சிறுவனிடம் ஏன் அந்த குறிப்பிட்ட இராகத்தை பாட வேண்டாம் எனக்கூறினார்?

(4 புள்ளிகள்)

5) சிறுவன் உணவுப் பொதியை எந்த மரக்கிளையில் கட்டிவிட்டு இளைப்பாறினான்?

(2 புள்ளிகள்)

6) சிறுவன் ஆகிரி இராகத்தை எவ்வேளை வரை பாடினான்?

(2 புள்ளிகள்)

7) சிறுவன் ஆகிரி இராகத்தைப் பாடி முடித்த போது உணவுப் பொதி உயரத்தில் காணப்பட்டதற்கான காரணம் என்ன?

(4 புள்ளிகள்)

8) இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?

(2 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**2.1. பொருத்தமான சொற்களின் கீழ் கோடிடுக**

1) பெற்றோர், பிள்ளைகளின் நடனத்தைக் கண்டு (களித்தனர் / கழித்தனர்)
2) கடற் (கறையில் / கரையில்) சிறுவர்கள் மணற்கோட்டை கட்டி விளையாடினார்கள்.
3) மல்லிகை மலர் (மனம் / மணம்) வீசியது.
4) கிளி தன் (அழகினால் / அலகினால்) மாம்பழத்தை கொத்தி தின்றது.
5) நாதஸ்வர (ஒலி / ஒளி) ஊரெங்கும் பரவியது.

(5 புள்ளிகள்)

**2.2. பின்வரும் சொற்களின் எதிர்கருத்துச் சொற்களை எழுதுக**

1) இரவு ______________________________
2) வீரன் ______________________________
3) முடிவு ______________________________
4) நம்பிக்கை ______________________________
5) வெற்றி ______________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**3.1. பின்வரும் பழமொழிகளை, கீழே தரப்பட்டுள்ள சொற்தொகுதியைக் கொண்டு பூர்த்தி செய்க.**

1) ஏட்டுச் சுரைக்காய் ______________________________

2) வெள்ளம் வர முன்பே ______________________________

3) இக்கரை மாட்டிற்கு ______________________________

4) வளரும் பயிரை ______________________________

5) இளம் கன்று ______________________________

| | |
|---|---|
| அக்கரை பச்சை | கறிக்கு உதவாது |
| முளையில் தெரியும் | அணை கட்ட வேண்டும் |
| பயம் அறியாது | |

(5 புள்ளிகள்)

**3.2. பின்வரும் மிருகங்களின் தொனிகளை கீழே தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

1) சேவல் ______________________________

2) ஆடு ______________________________

3) கோழி ______________________________

4) காகம் ______________________________

5) நாய் ______________________________

| | | | | |
|---|---|---|---|---|
| கொக்கரிக்கும் | கரையும் | குரைக்கும் | கூவும் | கத்தும் |

(5 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**4.1. பின்வரும் சொற்களின் பொருளை விளங்க வசனம் எழுதுக.**

1) கலை

______________________________

2) மழை

______________________________

3) வலி

______________________________

4) படி

______________________________

5) அறை

______________________________

(10 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**5.1. பின்வரும் ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் சொற்களை எழுதுக**

1) Bushfire ______________________________

2) Volcano ______________________________

3) Floods ______________________________

4) Cousin ______________________________

5) Multi-culturalism ______________________________

(5 புள்ளிகள்)

**5.2. பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

1) ஐந்து + பத்து ______________________________

2) கல் + பாறை ______________________________

3) நான்கு + நூறு ______________________________

4) முள் + செடி ______________________________

5) வெள்ளை + கட்டி ______________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுக**

உங்கள் உறவினர் ஒருவருக்கு தமிழ் பாடசாலையில் நீங்கள் இயங்கலையில் (online) கல்வி கற்கும் அனுபவம் பற்றி விளக்கி ஒரு கடிதம் எழுதுக.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களிற்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1) தமிழ் வளர்த்த பெரியார்
2) தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள்
3) மிருகக்காட்சி சாலைக்கு சென்ற எனது அனுபவம்
4) தமிழர் பண்டிகை